# 6th Annual International Research Conference – 2017 (AIRC 2017)

## Faculty of Management and commerce
## South Eastern University of Sri Lanka (SEUSL)

# OPTIMIZING ENTERPRISE THROUGH RESEARCH EXCELLENCE: TECHNOLOGICAL CHANGE AND INNOVATION

## Proceedings

## November 15 & 16, 2017

**ISSN: 2536-8869**

Published by:
Faculty of Management and Commerce,
South Eastern University of Sri Lanka,
University Park
Oluvil, 32360
Sri Lanka

© Faculty of Management and Commerce 2017
This work is subject to copyright. All the rights are reserved by the publisher. Nothing in this work may be reproduced in any form, any part or as a whole, without express a written permission from the publisher.

Disclaimer
The views expressed remain the responsibility of the named authors and do not necessarily reflect those of publisher

# “திருவையாறு கிராமத்தின் பொருளாதார அபிவிருத்தியில் அரசசார்பற்ற நிறுவனங்களின் வகிபாகம்”
# (Ngo’s Activities in the Rural Development of the Thiruvaiyaru Village)

Sutharsini, Mohan[1] and Ravishankar V.[2]

[1]Faculty of Graduate Studies, University of Jaffna
[2]Department of Economics, University of Jaffna

**ஆய்வுச்சுருக்கம்**

“திருவையாறு கிராமத்தின் அபிவிருத்தியில் அரசசார்பற்ற நிறுவனங்களின் வகிபாகம்” என்ற இந்த ஆய்வானது,கடந்த 30 ஆண்டுகால யுத்தத்தின் பின் 2009ல் ஏற்பட்ட இடப்பெயர்வு மற்றும் அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற மீள்குடியேற்றம் என்பன ஏனைய பிரதேசங்களிலிருந்து இப்பிரதேசத்தினை வேறுபடுத்திக் காட்டுவதுடன் அதிகளவான அபிவிருத்தியினை வேண்டி நிற்கும் பிரதேசமாகவும் விளங்குவதனால் இது ஆய்வுப்பிரதேசமாகத் தெரிவு செய்யப்படுகின்றது. இந்த ஆய்வின் முதன்மை நோக்கமாக ஆய்வுப்பிரதேசத்தின் அபிவிருத்தியினை மேம்படுத்துவதில் அரச சார்பற்ற நிறுவனங்கள் சமூக ரீதியாகவும்இ பொருளாதார ரீதியாகவும் பங்காற்றுகின்ற விதத்தினைக் கண்டறிதல் என்பதுவும், சிறப்பு நோக்கங்களாக கடந்த 20 வருடங்களாக இப்பிரதேசத்தில் ஏற்பட்ட பாதிப்புக்களைக் கண்டறிதல், இப்பிரதேசமானது அபிவிருத்தி தொடர்பாக எதிர்நோக்கும் பிரச்சனைகளை இனங்காணுதல், இப்பிரதேசத்தின் அபிவிருத்தியில் அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகளை இனங்காணுதலும், எதிர்காலத்தில் எவ்வாறு அமைய வேண்டும் என எடுத்துக் கூறுதலும், பிரதேச அபிலிருத்தியை முன்னெடுத்துச் செல்வதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் சாத்தியப்பாடுகளைக் கூறுதல் என்பனவும் காணப்படு:கின்றது. ஆய்வின் கருதுகோள்களாக ஆய்வுப்பிரதேசத்தின் பொருளாதார ரீதியான அபிவிருத்திக்கும்இ அரசசார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகளுக்குமிடையே நேரான தொடர்பு காணப்படுகின்றது என்பதும் ஆய்வின் முடிவுகளாக அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகள் கிராமத்தின் பொருளாதார நலன் சார் அபிவிருத்திக்கு 65% மான பங்களிப்பினை வழங்குகின்றன என்பதனையும் உள்ளடக்கப்படுகின்றன. அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகள் கிராமத்தின் அபிவிருத்தியில் 61% மான பங்களிப்பினை வழங்குகின்றன என்பதனையும் முன்வைக்க முடிகின்றது.

**திறவுச் சொற்கள்:** கிராம அபிவிருத்தி, அரசசார்பற்ற நிறுவனம், வகிபாகம்